பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

—*—

இப்புத்தகத்துள்

# சலவாத்துப் பாட்டு.

கப்பற்பாட்டு - ஊஞ்சற்பாட்டு,
கும்மிப்பாட்டு - தாலாட்டு, 1180
தோழிப்பெண் பாட்டு.

ஆகிய விவ்வாறும்-அடங்கியிருக்கின்றன,

கொழும்பிற் புத்தகவியாபாரஞ்செய்யும்
நெ-வா - காதிறும்நெயினுலெவ்வையவர்கள்
கேட்டுக்கொண்டமையால்

**கண்ணகுமதுமகுதூமுகம்மதுப்**

புலவரவர்களாற்,றமதேற்பாட்டுப் புத்தகத்தில்
நின்றுமெடுத்துப் பார்வையிட்டு

கொ மாணிக்க முதலியா ரவர்களாற் றமது
சென்னை
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

திருத்தமான பதிப்பு.

ஹிஜுறத்து-௲௨௱ அஹுஸ்-றபீயுல்லவ்வல்மீ.

RAJAH SERFOGI'S SARASWA

# விளம்பரம்.

—*—

இதனாலே, கனம்பொருந்திய கல்விமான்கள் முதலிய சகலர்களுக்குந் தெரிவிப்பதியாதெனில் - எம்முன்னோர்களும், யாமும் இராஜகட்டளைச் சட்டங்களோடு மச்சிட்டு வழங்கிவரும் முகம்மதீய்ய நூற்புத்தகங்களை மதிராசிலிருக்குஞ் சிலஅச்சுக்கூடத்தாராகிய இந்து மதஸ்தர்கள், ஒளிப்பு மறைப்பாக எங்களுத்திரவும், பார்வையு மில்லாமற் பலவாறு பிழைகளாக அச்சிட்டு எங்கள் மார்க்க நூற்களை மிகவுங் கெடுதிகளாக்கி யிருக்கின்றார்கள்-அதனைச் சகிக்கக் கூடா திருக்கின்றனம்.

இப்போது, அப்படிக் கெடுதியாய்ப் பிழைகளுற்றிருக்கும் எங்கள் மத நூற் புத்தகங்களைத் திருத்தி யொழுங்குபோல் அச்சிட்டிருக்கின்றமையால், அப்புத்தகங்களைக் கொண்டு திருட்டுத்தனமாக அச்சிடுகின்ற இந்து சமயத்தாராவது மற்றெந்த சமயத்தினராயினும் இதற்கு விரோதமாக நடந்தால் அவர்கள்பேரில் தாவாச் செய்வோம்.

இன்னும், முகம்மதீய்ய எங்கள் மார்க்கநூற் புத்தகங்களை அம்மார்க்கத்திற்கு விரோதிகளாகிய இந்து அச்சுக்கூடத்தார்கள் விற்பனைக்காகத் தப்புந் தவறுமாக அச்சிடுவது நியாயமல்ல, அஃதேனெனில்; முகம்மதீய்ய மார்க்க நூற்களெல்லாம் விக்கிரகத் தூஷணையே யல்லாமல் வேறில்லை, அப்பேர்ப்பட்ட நூற்களை விக்கிரக வாராதனையராகிய சில இந்து அச்சுக்கூடத்தார்கள் எங்கள் பார்வையின்றித் தப்புந்தவறுமாக அச்சிட்டு விற்கிறதைப் பார்த்தாற் பணத்திற்காகப் பசுவையறுத்துப் பங்குவைத்து விற்கும் பான்மையா யிருக்கிறதேதவிர வேறில்லை.

ஆதலாலினிமேலப்படி அத்துமீறி அச்சிடுபவர்கள்பேரில் யாதொருதடையின்றித் தாவாச் செய்யப்படும், இதை யாவர்களு மறிவீர்களாக.

இங்ஙனம்,

காதிரி- சென்னை முகம்மதீய்ய புத்தகபரிபாலனத் தலைவர்

**காதிரி-கண்ணகுமது மகுதூ முகம்மதுப்புலவர்.**

முதலிய

**முகம்மதீய்யர்.**

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இ ஃ து,

காயற்பட்டணம்

உதுமானயினுர்லப்பைப் புலவரவர்கள்பாடிய

# சலவாத்துப்பாட்டு.

கொச்சகக் கலிப்பா.

இன்னல்லாகவென் றேகுறு ஆனிலே ஏகனுயத் திறக்கி யதன்ப யன், சொன்னன்யானு மலக்குக ளியாருமென் றூதர்மீதிற் சொலுஞ் சலவாததையே, புன்னும்யாரு மியம்புங்க ளொன்றிற்குப் பத்துயா னுைப் பேனென்ற தாலது, தன்னை யோதின ருளுமுகம்மது சல்லல் லாகு அலைகிவ சல்லமே. க

மன்னர்மூசா நபிக்கொரு மானுடன் மாறு செய்தவன் மாண்டடக் காதிருங், தென்னவே யிறை யென்னடி யானிடத் தேகிநீர்கப னிட் டக் கும்மவ, னுன்னியேநபி பேர்தவு ருத்திற்கண் டோதினுன் சல வாத் தொன்றாலது, தன்னை யோதின ருளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. உ

நாதர்மூசா நபிதான் கியாமத்து நாளில் நாவினிற் ருகம் வராம லே, யோதவேயிறை யேயறி யேனதற் கோதயாறப்பே யொன்றுரை யாயெனத், தூதராமிற சூல்சல வாத்தைநீர் சொல்லுங் தாகம் வரு தெனச் சொன்னதாற், ருதுநீரென்னை யாளு முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. ங

உங்கள்தீன்வழி யாயிருங் துங்கள்பே ரோதக்கேட்டுட னேசல வாத்தினைப், புங்கமாயுரை யாதபகிலனைப் போல்பகில னிலையெனத் தேவரீர், சங்கைநாவுகொண் டோதின தாலது தன்னை யோதவுங் தந்துங் கபுறினிற், றங்குநாளென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே ச

காட்டுமானபி யேயுமைத் தான்பிணை கானகத்தினில் வைத்தி னி யான்வர, மாட்டேனுகி லுமதும்மத் தானவர் வள்ளலே யுங்கள் பேரவர் காதினிற், கேட்டுமேசல வாத்துரை யார்வழி கேட்டிலாவ

னென் றேழுதின தாலும்மைச், சாட்டினேனென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. ரு

மெய்க்குருனை விரித்திறை யேவின வேதவாய்மை விலக்குகன் னுசுகை, சிக்கிராப்பக லாப்பெரும் பாவமே செய்தன் யானடி யே னென்ன செய்குவேன், மக்கராஜ முகம்மதே நும்சல வாத்தை யோ தும் வரிசையி லுலென்றன், சக்கருத்தினி லாளுமுகம்மது சல்லல் லாகு அலைகிவ சல்லமே. சு

துஞ்சிநாளுங் கபுறி லடங்கியே சோருநாளுங் கியாமத் தமளியா லஞ்சிநாளு மகுஷறி லேயதா பானநாளு மடிபா ரீனவருங், கெஞ்சு நாளு மிறைவனை காவென்று கேட்குநாள்முஸ்தக் கீமெனும் பா லத்திற், றஞ்ச நீயென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல் லமே. எ

தம்பிரான்சத வானத்துச் சூரியன் றன்னையேசவ ளத்துயர் வா கவே,முன்புகாட்டி நிறுத்துமப் போதலே மூளைவெந்து முபங்கி அந் தோவென, வெம்பியே யழு நாளைமகுஷறு வேளையாள்பவர் நீரன்றி வேறில்லைத், தம்பநீரென்னை யாளு முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. அ

வாருலாவுமடமயி லாசியா மங்கைமாது மறியமு மேமணக்,சோ ருலாவி யுமக்கிறை செய்மணக் கோலமாய்மகு மூதினி லேறிப்பொன் னூருலாவி வருந்திருக் காட்சியு முண்மையாதிதீ தாறையுங்காணவே தாருநீ ரென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. கூ

அல்லெல்லாநடந் தேகடந் தேழுவா னம்பரத்துயர் வாகியப்பால் அறு,ஷிலலல்லாமுன மத்தகிய் யாத்தையே யியம்பவாதி திருவுளமா னதாற்,சொல்லெல்லாஞ்சல வாத்துஞ் சலாமுமே சொன்னதாலதை யானு மியம்பினேன்,சல்லல்லாகு அலாஅ முகம்மது சல்லல்லாகு அ லைகிவ சல்லமே. ய

சலவாத்துப் பாட்டு - முற்றிற்று.

—*—

முன்னோர்கள் பாடிய,

## கப்பற்சிந்து.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

லாஇலாக இல்லல்லாகு - இல்லல்லா
முகம்மதுர்ற சூலுல்லாகி - சூலுல்லா - லாஇலாக

க. முத்ததினு லுதித்து வந்தோர் இல்லல்லா
மொழியஹதாய்ப் படைக்க வந்தோர் இல்லல்லா
கத்த னருள் சிறக்க வந்தோர் இல்லல்லா
கனக விளக் காகி வந்தோர் இல்லல்லா

முடுக்கு

புத்திமதி ஹக்கனரு ளுட்பிரிவ தாகிப், பொற்பதி கனத்தருசு நற்புவியும் வாழ்க, எத்திசையு மொய்க்கவொரு பொற்பிரபையாகி, ஏகாந்த மானநவ ரத்நமயிலாகிச், சுத்தமுடன் நான்குமூ லேக்கிணறு மாகித், துய்யகலி மாவதனி னுட்பொருளு மாகிக், குற்றமணு காதநபி கப்பல்கவி பாடக்,கோமானே யெங்குநிறை சீமானீ காப்பு. லாஇ

உ. அலிபுமரம் ஏருவாய் இல்லல்லா
அடுத்திடுங்கால் வங்கதுவாய் இல்லல்லா
மெலிவில்லாஹேய் சலே மரமாய் இல்லல்லா
மிகுத்திடும்றேய் ரொங்கதுவாய் இல்லல்லா

முடுக்கு

மலிவான தாலதினுல்க் காம்பரு வைத்து, வளர்கின்ற லாமதால்க் கமர்பந்து கட்டிக், குலவுநல மீமினுல்க் கபாலங்க ளிட்டுக், கோமான் றன்ஹேயினுற் சிங்கஞ் சமைத்து,வலியாத காபென்ற அணியம் பரப்பி, வல்லவன் காவென்ற சுக்கானை யேற்றிப், பெலமாக இவ்வெழுத் தால்வங்கம் வைத்தார்,பேசுங்கண் மூன்றதா லெவருமே காண. லாஇ

ங. நால் சிபத்துத் தர்ள மணி இல்லல்லா
நல்ல பச்சை மலக் கூத்து இல்லல்லா
வாச ஜப றூத்ததனில் இல்லல்லா
வருஞ் செவப்புப் பவளமது இல்லல்லா

முடுக்கு

ஆசையுள மலக்கூத்து நற்கறுப்ப தாகி, அழகான லாகூத்துத் தங்க மொடு நல்ல, ஓசையுள தாழுனைப் பூப்பலவுந் தூக்கி, உண்மை

யெனுஞ் ஞானகலை மேற்கட்டு கட்டிப், பேசுமொரு அவ்வலெனு நற்கொடியு மேற்றிப், பிசகாமல் ஜல்ஜலெனு மேளந் தொனிக்கக், காச கல நால்பேர்கள் பாத்திஹா வோதிக், கடல்மீதிற் கப்பலை யிறக்கினு ளாயா. லாஇலாக

ச. பாய்மரந்தான் பேயக ஞல் இல்லல்லா
பகரும் தேய்தான் கிப்லாவாய் இல்லல்லா
ஆயுங்காலி யாமரந்தான் இல்லல்லா
அடுத்த தொரு தாலதனுல் இல்லல்லா

முடுக்கு

தோயாம லிவைகள்நன் ருகவே கட்டித், துய்யலாம் சன்னபின் ன லாலாத் துமாக, நேயமுடன் காம்பரு நாலெழுத் தைனுய், நிகரிய சவுந்திராப் பாய்மரத் தேயுடன், ஓயாத தூண்டா விளக்கெழுத் தை னுய், உண்மைசேர் வெற்றியா பொக்கத்துலங்க, நாயனரு ளீராறு பீரங்கிதீர்ந்து, நலமாக நற்சரக் கேற்றினு ளாயா. லாஇ

ரு. ஆனகலி மாவேற்றி இல்லல்லா
அளவுடன்ஈ மா னேற்றி இல்லல்லா
சீனத் துள்ள கப்பலிலே இல்லல்லா
சிறந்தமகு பூபேற்றி இல்லல்லா

முடுக்கு

தானமுடன் கலாசுகள் தொண் ணூற்றி யாறுந், தகுமான கணக் கர் நா மிருபேருமாக, ஈனமில் லாச்சிறுங் கிரு பேருமாக, இபல்பான கப்டல்நகு தானேக்கி னேடும், மானமுள்ள. மாலினவ னெருவனி னேடும், வளமான வங்கமதி லேறியே நின்று, ஆனதொரு ஆ-கூ-கீ- யென்னும், அழகான மந்திரப் பாய்விரித் தோடினர். லாஇ

சா. சாயல் நகர்க் கடல் கடந்து இல்லல்லா
கன்யகும ரினிற் போந்து இல்லல்லா
ஆயுமலை யாளஞ் சென்று இல்லல்லா
அடுத்த பொன்னுக் கையைக் கடந்து இல்லல்லா

முடுக்கு

மாயத கண்ணூர் தலைச்சேரி கண்டு, வங்கார மானஜன் கன்ஞு டி வைத்தே, ஓயாத அட்சரக் கயிறுபா யேற்றி, ஓங்கார மானபகர் தன்னிலே யேறிச், சாயாத வண்ணமா யோடியப் போது, சத்துருக் கள்ளனை யக்துவரக் கண்டு, நீயாரு சொல்லெனக் கா-கீ-கூவென நேரான மொழி கேட்டங் கோடினு ளாயா. லாஇலாக

எ. கள்ளக் கப்பல் தன்னை வென்று இல்லல்லா
கனத்த பகர் தனைக் கடந்து இல்லல்லா
தெள்ளிய ஜுத்தாவிற் சென்று இல்லல்லா
சிறந்த லங்கர் விட்டிறங்கி இல்லல்லா

முடுக்கு

வள்ளல்மகு மூதுநபி மக்காவிற் சென்று, வண்மை யுடனேகரு பாவலம் வந்து, விள்ளு முறை ஆகநபி பாதங் கடந்து, மேவமதினு நகர மெய்ப்போடு சென்று, உள்ளகும தாம்வெளியில் வாய்பொற்றி நின்று, உவப்பான காபகபு சையினியிம் சென்று,மெள்ள வருபள்ளி மகு மூதைக் கடந்து, மேலவன் ஹலறத்தி லானுர்களையா. லாஇ

அ. ஆன பொழு தேகனவன் இல்லல்லா
அரிய செய்கை தனைப் புகழ்ந்து இல்லல்லா
தீனர் புகழ் நபியிறசூல் இல்லல்லா
செங்கமலப் பதம் புகழ்ந்து இல்லல்லா

முடுக்கு

தானுன ஏகனெலி முகியித்தீன் பாதம், தப்பாம லெப்போதும் நட்பாய்ப் புகழ்ந்து,கோனுன ஆதிகுத றத்தைத் தெரிந்து,குத்தூசுறாகுநபி யானுர்கள் நல்ல, தீனுன பேர்களிதை நன்ருய்த் தெளிந்து, ஜெயமுள்ள வோர்பொருளே யென்றென்றுநாடி, மானமொடு முற்றிடிற் பேறதிக முண்டாய்; வல்லவன் கிருபைமிக வளருமே ஐயா(லா

கப்பற்சிந்து - முற்றிற்று.

நாகூர் - முகம்மதுப் புலவர்பாடிய

## ஊஞ்சற் பாட்டு.

—o*o—

தரு-இ-ம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடவாங்கள் ஊஞ்சல் ஆடவாங்கள்
அன்னமே பொன் னூஞ்சல்- ஆடவாங்கள்

அநுபல்லவி.

ஆடவாங்கள் கூறுல்ஹீன்களோடிவாங்கள்
ஆலநபி யுல்லாமேற் பாடவாங்கள் ஆட

சரணங்கள்.

க. ஆதிபெரி யோனருளாற் கால்கணாட்டி
யவனறு ஷொளியாலே விட்டம்போட்டுச்
சீதமா குறுசொளியால் வடங்கள் பூட்டி
ஜென்னத்தி னொளியாலே பலகைபாவிக்
கீதமுடன் கூறுல்ஹீன்கள் கவரிவீசக்
கிருபையுடன் வானவரா லாத்தியேந்த
ஆதமுதல் நபிமார்கள் வடந்தொட்டாட்ட
ஆலநபி மகுமூத ராடுமூஞ்சல். ஆட

உ. பச்சைசமர கதந்தனாற் கால்கணாட்டிப்
பவளவயி டூரியத்தால் விட்டம்போட்டு
நட்சத்தி ரங்கள்போலே வடங்கள்பூட்டி
நல்லமணி முத்ததினாற் பலகைபாவிக்
கச்சணிந்த கூறுல்ஹீன்கள் கவரிவீசக்
ககனவர்கஸ் தூரியா லாத்தி யேந்த
முச்சகம் புகழ்நபிமார் வடந்தொட்டாட்ட
முகம்மதுற்ற சூல்நயினா ராடுமூஞ்சல். ஆட

ங. அதிகவொளிச் சூரியனாற் கால்கணாட்டி
யழகுநட் சத்திரத்தால் விட்டம்போட்டு
மதியொளிவு சந்திரனால் வடங்கள்பூட்டி
மறையாத மின்னொளியாற் பலகைபாவிப்
பதியொளிவு கூறுல்ஹீன்கள் கவரிவீசப்
பச்சைக்கற் பூராஆ லாத்தியேந்த
கதிஜா ஆயி ஷாஇருவர் வடந்தொட்டாட்ட
காத்திமுல் நபியிருந் தாடுமூஞ்சல். ஆட

ச. வயிரம்வயி டூரியத்தாற் கால்கணாட்டி
மாணிக்கத் தாலதின்மேல் விட்டம்போட்டே
உயரொளிவு நீலமணி வடங்கள்பூட்டி
யோசைபெறுஞ் சுவனமணிப் பலகைபாவி
நயமுடைய கூறுல்ஹீன்கள் கவரிவீச
நறைகமழுங் குங்குமத்தா லாத்தியேந்த
மயிமூனா மாரியத்தும் வடந்தொட்டாட்ட
முகம்மதுற்ற சூல்நயினா ராடுமூஞ்சல். ஆட

௫. வஸிதுறத்துல் முந்தஹாவாற் கால்கணட்டி
ஜென்னத்து பிருதெளசால் விட்டம்போட்டுக்
குதறத்தி னாலேசில வடங்கள் பூட்டி
குல்வுலெளகு மகுபூலுப் பலகைபாவி
மதுரவாய்க் கூறுல்ஹீன்கள் கவரிவீச
வானவர்கள் பணிசீரா லாத்தியேந்த
விதுவதன அபஷாவும்மா வடந்தொட்டாட்ட
வேதாம்ப ராலநபி யாடுமூஞ்சல். ஆட

௬. லாகூத்தி னாலேயொளிக் கால்கணட்டி
நயமுள்ள மலக்கூத்தால் விட்டம்போட்டுத்
தீர்க்கமுள்ள ஜெபறூத்தால் வடங்கள்பூட்டிச்
செயவொளிச் சலவாத்தாற் பலகைபாவி
வாக்கில்சல வாத்துடனே சவுதாவும்மா
வரிசையுள்ள றகுமாவும்மா வடந்தொட் டாட்டத்
தீர்க்கமுள்ள ஆலநபி யாடுமூஞ்சல்
தீன்தீன் முகம்மதநா ராடுமூஞ்சல். ஆட

௭. சந்தனத்தி னாலிலங்கக் கால்கணட்டித்
தயங்கவொளி யகிலதனால் விட்டம்போட்டு
விந்தையுள்ள குங்குமத்தால் வடங்கள்பூட்டி
விளங்குகின்ற கஸ்தூரிப் பலகைபாவிக்
கொந்துலவு கூறுல்ஹீன்கள் கவரிவீசக்
கூர்மையுள்ள உம்முசல்மா வடந்தொட்டாட்டச்
சுந்தரஞ்சே ராலநபி யாடுமூஞ்சல்
சோதிநபி முகம்மதநா ராடுமூஞ்சல். ஆட

௮. பொன்னொளியி னாலேசில கால்கணட்டிப்
புகழொளியி னலதின்மேல் விட்டம்போட்டு
மின்னொளிவு போலமுத்து வடங்கள்பூட்டி
மேன்மையுள்ள மரகதத்தாற் பலகைபாவிக்
கன்னியர்கள் கூறுல்ஹீன்கள் கவரிவீசக்
கதியுறு மும்முல்மாக்கீன் வடந்தொட்டாட்ட

மன்னர்புகழ் நபியிறசூ லாடுமூஞ்சல்
மக்கநகர் முகம்மதனு ராடுமூஞ்சல். ஆட

சு. ஆணிப்பொன் னதனாலே கால்கணாட்டி
யழகுமணி ரத்தினத்தால் விட்டம்போட்டு
மாணிக்க மிழைத்தமணி வடங்கள்பூட்டி
வானிலங்கு முத்தியமெனப் பலகைபாவிச்
சேணாட்டு கூறுல்ஹீன்கள் கவரிவீசச்
செயினபு நாச்சியார் வடந்தொட்டாட்டப்
பூணார மார்பிறசூ லாடு மூஞ்சற்
புகழ்பெற்ற நபியிறசூ லாடுமூஞ்சல். ஆட

ய சித்திரத்தி னாலேசில கால்கணாட்டித்
தெள்ளமுத வின்பத்தால் விட்டம்போட்டு
வெற்றியுடனம்பொன்னாலே வடங்கள் பூட்டி
மேவும்வயி ரியத்தாற் பலகை பாவி
மத்திதனில் கூறுல்ஹீன்கள் கவரி வீச
மறியம்ஆசி யாஇருவர் வடந்தொட் டாட்ட
முத்திரைசே ராலநபி யாடு மூஞ்சல்
முஸ்தபா முகம்மதனு ராடுமூஞ்சல். ஆட

யக. திக்கிசெறுலி யாலேசில கால்க ணாட்டித்
தீர்க்கமுள்ள தசுபீஹால் விட்டம் போட்டுத்
தக்குபீறு தன்னொளியால் வடங்கள் பூட்டித்
தகையுடனே தகுலீலாற் பலகைபாவிப்
பக்கமதில் கூறுல்ஹீன்கள் கவரி வீசப்
பண்பாூ பக்கருமர் வடந்தொட் டாட்ட
மக்கநகர் வாழரச ராடு மூஞ்சல்
முகம்மதுற்ற சூல்நயினா ராடு மூஞ்சல். ஆட

யஉ அல்ஹம்து என்றவொரு கால்க ணாட்டி
லில்லாகி என்றதன்மேல் விட்டம் போட்டு

நல்லியலின் றெப்பில்லன்ற வடங்கள் பூட்டி
நவிலுமொரு ஆலமீனும் பலகை பாவிக்
கல்புமகிழ் கூறுல்ஹூீன்கள் கவரிவீசக்
கதியுத்துமா ஞரலியும் வடங்தொட் டாட்டச்
செல்வமுறும் ஆலநபி யாடு மூஞ்சல்
செய்யிது முகம்மதனூ ராடு மூஞ்சல். ஆதி

௰௩. சுல்தானி யென்றதொரு கால்க ணூட்டிச்
சுத்தமுள்ள மலக்கானி விட்டம் போட்டுக்
குல்தானி யென்றதின்மேல் வடங்கள் பூட்டிக்
குலவுமொளிப் புறுக்கானிப் பலகை பாவி
வலமிடமும் கூறுல்ஹூீன்கள் கவரிவீச
வள்ள லசனுசைனும் வடங்தொட் டாட்டக்
குலத்திலுயர் குறைஷிநபி யாடு மூஞ்சல்
கோஜாமு கம்மதனூ ராடு மூஞ்சல். ஆட

௰௪. வல்லோன் றகுமத்தாற் கால்க ணூட்டி
வரிசையுள்ள நிகுமத்தால் விட்டம் போட்டு
நல்லதொரு ஆபியத்தால் வடங்கள் பூட்டி
நலமான கிருபையினூற் பலகை பாவி
வல்லியர்கள் கூறுல்ஹூீன்கள் கவரி வீச
வான்ஜிபுரீல் மீக்காயீலும் வடங்தொட் டாட்டச்
செல்லுலவு கவிகைநபி யாடு மூஞ்சல்
தீன்தீன்மு கம்மதனூ ராடு மூஞ்சல். ஆட

௰௫. வாசமுள்ள பூமரத்தாற் கால்க ணூட்டி
வடிவுள்ள வச்ரமணி விட்டம் போட்டு
நேசமொடு மொளியுடைய வடங்கள் பூட்டி
நேர்மையுள்ள பொன்னதனூற் பலகை பாவி
ஏசகன்ற கூறுல்ஹூீன்கள் கவரி வீச
இசுறாயீலும் இசுறாபீலும் வடங்தொட் டாட்டத்

தேசம்புகழ் நபியிறசூ லாடு மூஞ்சல்
தீன்தீன்மு கம்மதனு ராடு மூஞ்சல். ஆட

௰சூ. காபக்கபு சைனியால் கால்க ணட்டிக்
கல்பென்ற சூழ்ச்சமதால் விட்டம் போட்டுச்
சாபசந்த்ர சூர்யகலை வடங்கள் பூட்டிச்
சங்கைமக்கா மன்மதுமூத் பலகைபாவித்
தாபரந்தொண் ணூற்றறுவர் வடந்தொட் டாட்டச்
சங்கையுட னவரங்கே கவரி வீசச்
சாபல்யமு கம்மதனு ராடு மூஞ்சல்
தாஜுல்அன்பி யாஇருந்தே யாடு மூஞ்சல். ஆட

௰எ. ஆலமஜி ஸாமதனற் கால்க ணட்டி
ஆலமிதா லானதனல் விட்டம் போட்டு
ஆலம்அறு வாஹதனல் வடங்கள் பூட்டி
ஆலம்இன்ஸா னனதனற் பலகை பாவிச்
சாலவுநம் முகியித்தீன் வடந்தொட் டாட்டச்
சங்கையுள்ள ஹமீதென்னும் சாகிபென்ற
சீலமுறு சிருஜித்தீன் மனத்தின் மேவும்
செய்யிதுமு கம்மதனு ராடு மூஞ்சல். ஆட

—*—

ஊஞ்சற்பாட்டு - முற்றிற்று.

—o*o—

புதுச்சேரி

ஓ - காதிறுமுகியித்தீன் புலவரவர்கள்பாடிய

# காரணக்கும்மி.

கும்மியடிபெண்ணே கும்மியடி-குபி
ரொடுங்கி யோடவே கும்மியடி
நம்மையா ளும்மிறை யவனைநிதமு
நாடிக்கும்மி யடியுங்கடி-தினந்-தேடிக் கும்மியடியுங்கடி. ௧

தானேதானா யிருப்பவனும்-என்றுந்
தன்னந்தனிமை யுடையவனும்
வானமும் பூமியும் போற்று மிறைவனை
வணங்கிக் கும்மி யடியுங்கடி-மன-மிணங்கிக் கும்மி யடியுங்கடி.

ஆலம் படையுணக் காரணமாய்-நின்ற
அண்ணல்மு கம்மது நந்நபிமேற்
சாலவு மாசல வாத்தினை யோதியே
தாழ்ந்து கும்மி யடியுங்கடி-மன-மோர்ந்து கும்மியடியுங்கடி. ௩

ஆதியி லேயொளி வாயிருந்தே-பின்னர்
அப்துல்லா நெற்றியில் வந்துதித்தே
மாதாமி னார்பெற்ற வள்ளலைப் போற்றியே
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி-மிகப்-புகழ்ந்து கும்மி யடியுங்கடி.

எல்லா வஸ்தும் படைத்தவனும்-நல்ல
ஈரே ழுலகையுங் காப்பவனும்
அல்லா வென்னும்பேர் கொண்டவன் றூதனை
யடுக்கக் கும்மி யடியுங்கடி-பவம்-விடுக்கக் கும்மி யடியுங்கடி. ௫

வானுல கெங்கும் புகழ்ந்தேற்று-மக்க
மாநகர் தன்னி லவதரித்த
தேனவிழ் மாலைமு கம்ம துறசூலைத்
தெரிந்து கும்மி யடியுங்கடி-மனம்-புரிந்து கும்மியடியுங்கடி. ௬

அரம்பைக ளோடாசி யாமறிய-மிந்த
வவனியில்வந்து மருத்துவஞ் செய்யவே
கருணை யாகப் பிறந்த முகம்மதைக்
கருதிக் கும்மி யடியுங்கடி-குழல்-சொரிகிக் கும்மி யடியுங்கடி. எ

ஞானமுந் தானமு நல்லறிவு-மிக்க
நானமு மானமு முள்ளவராம்
வானவர் போற்றுமு கம்மதுறசூலை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி-கார்-தாழ்த்திக் கும்மி யடியுங்கடி.

சுற்றிலுங் காத வழியி லரசருஞ்
சுடிகை மன்னர்க ளீரற்குலை யெலா
முற்று நடுங்க நபிப்பட்டம் பெற்றோரை
முடுகைக் கும்மி யடியுங்கடி-மிகக்-கடுகைக் கும்மி யடியுங்கடி. கூ

மனுசின் புதல்வ ரிருவருஞ் செத்து
மரித்திடுஞ் செய்தி யறிந்த வுடன்
துஆச்செய் தெழுப்பிய தூதர் தமைப் போற்றித்
துதித்துக் கும்மி யடியுங்கடி-மிக-மதித்துக்கும்மி யடியுங்கடி ௰

வஞ்சனைத் தொழில்கள் வானுலகிற்-செல்ல
மாட்டாதென் றெண்ணியே வாக்களித்தோர்
நெஞ்சம் புழுங்க நிலவைப் பிளந்தோரை
நினைந்து கும்மி யடியுங்கடி-துகில்-புனைந்து கும்மி யடியுங்கடி (

ஓதுங் கியாமத்தில் மானுடர்கள்-மிக
வொடுங்கி யலையும் போதினி லேநல
வாதரஞ் சொல்லிமன் றுடுநபிபுக
ழறிந்து கும்மி யடியுங்கடி-மலர்-சொரிந்து கும்மி யடியுங்கடி )

ஹாஷிம் குலத்தி லுதித்தவ ராம்பனீ
ஆதம் மரபினில் வந்தவராம்
வாசனை வீசுமெய்த் தூதரின் தீன்மிக
வலுக்கக் கும்மி யடியுங்கடி-ஓசை-சொலிக்கக் கும்மியடியுங்கடி

சல்மான் பாரிசுக் காண்டினி லீந்துகள்
தளிர்த்துக் காய்கனி தந்திட நட்டிய

செல்லார் கவிகை மாதவர் தீன்மிகச்
செழிக்கக் கும்மி யடியுங்கடி-பவம்-ஒழிக்கக் கும்மி யடியுங்கடி.

திமிசி றையவ னீன்ற தசையினைச்
சீர்பெறப் பெண்ணுரு வாக்கிவைத்த
அமரர் புகழ் முகம் மதைப் போற்றியே
அன்பாகக் கும்மி யடியுங்கடி-மிகு-தென்பாகக் கும்மி யடியுங்க

காட்டினில் வாழும் பிணைக்குப் பிணைநின்று
காரண மனந்தங் காட்டியே நன்மறை
யேட்டி லடங்கா விறையவன் றூதலா
யிசைந்து கும்மி யடியுங்கடி-மெள்ள-அசைந்து கும்மியடியுங்க

பொல்லாத சூத னிபுலீ சுந்தினம்
புலம்பித் திரியப் பூதல மீதிலே
மல்லாடுங் காபிரை வென்றமுகம்மதை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி-கரங்-தாழ்த்திக் கும்மி யடியுங்கடி

வாடை கஸ்தூரி வழிகாட்ட வந்த
வள்ளல்மு கம்மதர் வாக்கிய மானதின்
சாடைக் குளம்பொருந் தாதவர் தங்களைச்
சாடிக் கும்மி யடியுங்கடி-தமிழ் பாடிக் கும்மி யடியுங்கடி. ௰௪

வானுல கிற்சென் றிறையுடனே மிக்கு
வார்த்தைக ளாடிய வள்ளல் முகம்மதர்
தீனையிகழ்ந்து நடக்கின்ற தீமையர்
தெளியக் கும்மி யடியுங்கடி-இடை-நெளியக் கும்மியடியுங்கடி

வாக்கு மனமும் பொருந்தச் சொலுங்கலி
மாவின்பொருளை மனதில்வையா
மாக்களை யேகன் வதைப்பனென் றெண்ணியே
வருந்திக் கும்மி யடியுங்கடி-யுண-வருந்திக் கும்மி யடியுங்கடி.

நாளொன்றுக் கைந்து விசைவணங் காரந்த
நாளில் நரகந் தனிலிருந்தே
தேளொன்று கொட்டித் திகைப்பரென்றே மனந்
தேம்பிக் கும்மி யடியுங்கடி-முகங்-கூம்பிக் கும்மி யடியுங்கடி. (

ஷறகின் தங்கட மின்றிநன் ஞேன்பினேச்
சட்டைசெய் யாமலே விட்டுவிட்டோரெரி
நரகி னிற்பசித் தலைவரொன்றுநீர்
நவின்று கும்மி யடியுங்கடி-மனம்-புகன்று கும்மி யடியுங்கடி.()

கள்ளுச்சர ராயந் தனேக்குடித் துச்சடைக்
கஞ்சா வயினி மிகப் புசித்தே
துள்ளி விழுந்தலைந் தேநடக் கின்றவர்
சுருங்கக் கும்மி யடியுங்கடி-எரி-நெருங்கக் கும்மி யடியுங்கடி.()

சூது சதுரங்கந் தன்னுடனே தினஞ்
சொக்கட்டா ஞ்டிடுந் துடுக்கப் பயல்கள்
வாதிற் பொருளழிந் தோய்ந்தபின் றீயினில்
வளரக் கும்மி யடியுங்கடி-விழி-புரளக் கும்மி யடியுங்கடி. உச

கொண்ட மனேவியை விட்டொருவன் கொண்ட
கோதையின் மீதினிற் காதலுறுமந்த
மிண்டர்கள் தீயினில் வீழ்ந்தழி வாரென்றே
விளம்பிக் கும்மி யடியுங்கடி மிக-எழும்பிக் கும்மி யடியுங்கடி.(

இந்தக் கும்மியைப் படித்தோர்க்கு-மிக
வேற்றம தாகவே கேட்டோர்க்கும்
முந்து மிறைவன் றகுமத்துண் டாமென்று
முழங்கக் கும்மி யடியுங்கடி-பெயர்-விளங்கக் கும்மி யடியுங்கடி

கும்மிப்பாட்டு-முற்றிறறு

—*—

முன்னோர்கள் பாடிய

# தாலாட்டு.

—o*o—

காப்பு - வெண்பா.

பாருலகில் வண்ணப் பரிமளம்வீ சும்மிறசூல்
சீருலகிற் றாலாட்டைச் செப்புதற்கு - நேருடனே
பார்த்தாலு மென்சொற் பாப்பழுது வாராமற்
காத்தாளு வாயிறைவா காப்பு.

—*—

கண்ணிகள்.

சீர்கொண்ட ஆலமெல்லாஞ் சிறந்தஇசு லாந்தழைக்க
நேர்கொண்ட தீன்மறையா நெறிகொண்டு வந்தவரோ. க

முன்னே யொளியாகி முதலோன் றிருத்தூதாய்ப்
பின்னே நபியாகப் பிறந்தமு கம்மதுவே. உ

அண்ணல்பு துல்லா அருமை மகவாகப்
பெண்ணமுக ஆமினார் பெற்றெடுத்த பாலகரோ. ங

அலிமா முலையருந்தி யவ்வரகத்தி லேவளர்ந்து
புலிமா னொருதுறைநீர் புசிக்கவந்த புண்ணியரோ. ச

திக்குத் திகாந்தத்துள தேயங்க ளுக்குயர்ந்த
மக்கமதிற் றோற்றிமதீ னம்மாள வந்தவரோ. ரு

மட்டிலவுஞ் சொர்க்க வாழ்மடவார் தாலாட்டத்
தொட்டிற்றுயில் கொள்ளுநல்ல துய்ய முகம்மதுவே. சா

மாணிக்கத் தொட்டிலதை மடவார் பிடித்தாட்டப்
பூணிக்கை யாய்த்துயிலும் புண்ணியராய் வந்தவரோ. எ

பார்க்கக் கணலெரியும் பாலைக் கடுஞ்சுரத்தில்
ஆர்க்குமுண நீரளிக்கு மண்ணல் முகம்மதரோ. அ

பாரமலை போலரவம் படம்விரித்துப் பர்தையிலே
நேரில் வருகக்கண்டு நீள் துரும்பாற் கொன்றவரே. ௯

கர்ன்கத்தி லாறுதனைக் கடுக வரவழைத்தே
யீனமில்லா நீரளித்த வெங்கள் முகம்மதுவே. ௰

புதியகிணற் றுப்புநீர் பொங்கிப் பதங்கழுவ
அதிவிதங்கள் காட்டிவைத்த வருமை முகம்மதுவே. ௰௧

எங்கணயி னுரே யெல்லவர்க்குந் தாயகரே
அங்கங்கஸ் தூரிமண மார்ந்த முகம்மதுவே. ௰௨

ஆதிமுத லோன்படைத்த அப்தோ ரடங்கலுக்கும்
நீதிமணிப் பேரொளியாய் நின்ற முகம்மதுவே. ௰௩

மூத்தி லுதித்தவரோ மூமினுய் வந்தவரோ
நித்தனருள் வேதப்படி நெறிநடத்துங் கோமானே. ௰௪

மஞ்சு குடைநிழற்ற மக்கநகர் வீதியெல்லாங்
கொஞ்சிவிளை யாடுமெங்கள் கோமான் முகம்மதுவே. ௰௫

விண்ணிலறு ஷேறிவரும் வேத முகம்மதுவே
கண்ணின்மணி யேபெரிய காரணரோ கண்வளரீர். ௰௬

தேசப் பொருளே தெவிட்டாத தேம்பாகே
வாசத் திருமேனி வள்ளன் முகம்மதுவே. ௰௭

உற்றஅபூ பக்கருக்கு முண்மை யுமர்தமக்கு
மற்றுநிக ரில்லாத மருகனொன வந்தவரோ. ௰௮

செய்யிதுது மானுர்க்குஞ் சிறந்த புலிஅலிக்கும்
வையம்புகழ் மாதுலராய் வந்த முகம்மதுவே. ௰௯

சீரார் மாம்அசனர் சிறப்பா ரிமாமுசைனர்
பேரார்தும் பேரனெனப் பேறுகொள்ள வந்தவரோ. ௨௰

நண்ணுமசு ஹாபியர்கள் நாற்பத்தீ ராயிரர்க்கும்
கண்ணினொளி போலக் கலந்திருந்த காரணரோ. ௨௧

திக்குகளில் தீனிசுலாஞ் சேர்ந்தவும்மத் தோர்களையே
தற்காக்கு மந்தச் சபாஅத்துக் குற்றவரோ. ௨௨

பங்கயப்பொற் றுள்பீபி பாத்திமா நாச்சியெனு
மங்கையர்க்குத் தந்தையென வந்த முகம்மதுவே. ௨௩

அண்டர் புகழ்கதிஜா அங்கணைவ ரென்றுலகோர்
கொண்டு புகழவந்த கோமான் முகம்மதுவே. ௨௪

எண்டிசையும் பாரு மேகாப் பெரும்பதியும்
அண்டருல கெல்லாம் அரசாள வந்தவரே. ௨௫

சூடேறுந் தீயதனுட் சுழன்றெரியும் பாவிகள்தா
னீடேற வந்துதித்த வெங்கண்மு கம்மதுவே. ௨௬

மீனோடும் பேசி மிடியருக்கு வாழ்வுநல்கி
மானோடும் பேசுமெங்கள் வள்ளல் முகம்மதுவே. ௨௭

வேம்பான காபிரும்மை வெட்டவரும் பாதையிலே
பாம்பே யுமை பொதும்பிற் பள்ளிகொண்டு வந்தவரே. ௨௮

நல்லநெறி யீமானு நானிலத்தி லேதழைக்கக்
கல்லும் பகர்ந்துகரி கழறவந்த காரணரே. ௨௯

தீமைதனைப் பேசுகின்ற செயலைக் கருவறுத்தே
ஊமைதனைப் பேசவைத்த முண்மை முகம்மதுவே. ௩௰

அறபுத் திருநாட்டி லடங்கலுமீ மான்றழைக்கக்
குறைஷிப் பெருங்குலத்திற் கோமானாய் வந்தவரே. ௩௧

சொல்லா லுயர்ந்ததிருச் சொர்க்கப் பதிக்கரசாய்
அல்லா வருட்டினை யருளவந்த வல்லவரே. ௩௨

ஈமான் றழைக்க இசுலாம் பெருத்தோங்க
மாமனங் காக்கவந்த மன்னர் முகம்மதுவே. ௩௩

நாயோ டுடும்புமுசல் நவிலுநாற் காலெவையு
மோயுதல தின்றியெதி ருரைக்கவைத்த காரணரே. ௩௪

கல்லை வணங்குங் காபிர்களை யேயறுத்து
நல்லநெறி யீமானை நாடேற்ற வந்தவரே. ௩௫

விரிந்த குபிர்க்காட்டை வெட்டவெளி யாக்கியதிற்
பரிந்தபுக ழீமானைப் பயிரேற்ற வந்தவரோ. ௩௬

செய்தவமெல் லாம்போற்றத் தீன்பயிரைத் தானேற்றிக்
கைவிரலால் நீரழைத்த ஹபீபுமு கம்மதுவே. ௩௭

கொந்தால மேயரசே கோஜால மேநிதியே
பிந்தா தொளியுடலிற் பிறக்குமு கம்மதுவே. ௩௮

ஆராருங் காணவொண்ணு தந்தரத்தின் மேலேபோய்ப்
பேரார் பெரியவன்முன் பேசிவந்த நாயகமே. ௪௰

வேதமே நாவில் விளைவான வித்தகரோ
பாத மவனிதீண்டாப் பாக்கியமே கண்வளரீர். ௪௧

பிடரிமிசை லாஞ்சனைதான் பிரகாசஞ் செய்திடவே
படையேறி வென்றுவரும் பார்த்திபரே கண்வளரீர். ௪௨

ஏகன் சமுகமதி லெக்கினென்னு மம்மரத்திற்
ரேகை மயில்வடிவாய்த் தோன்றிவந்த நன்னபியே. ௪௩

முன்காணுந் தூரமட்டு முழுது மதுபோலப்
பின்காணுங் காரணத்தின் பெருமையுள்ளீர் கண்வளரீர். ௪௪

வள்ளல் முகம்மதுமேல் வாழ்த்துகின்ற தாலாட்டை
யுள்ளம் பிரியம்வைத்தே யோது மவர்வாழி ௪௫

மூமீன் முகம்மதுமேல் மொழியுமிந்தத் தாலாட்டைப்
பூமிதி லெந்நாளும் போற்றிசெய்வோ ரும்வாழி. ௪௬

பூமியின்மும் மாரிமதி பொழிந்தெவர்க ளும்வாழி
ஆமீனல் லாஆமீன் யாறப்பில் ஆலமீனே. ௪௭

தாலாட்டு - முற்றிற்று.

முன்னோர்கள் பாடிய

# தோழிப்பெண் பாட்டு.

காப்பு-வெண்பா.

தோழிப்பெண் பாட்டைத் தொகுப்பா யுரைப்பதற்கிங்
காழிரு ழும்பூ வமைத்தோனே - வாழியுறும்
அல்லாவே யெற்கிங் கன்பருளே யேநிதமும்
நல்லாகத் தந்திடுவாய் நான்.

கண்ணிகள்.

ஆரியவனே பெரியவனே ஆயிரம்பே ருடையவனே.
உரியவனே யுடையவனே யுலகமெல்லாம் படைத்தவனே. ௧

உலகமெல்லாம்படைத்தவனே யுண்மையுள்ள மெய்ப்பொருளே
பலமலையு மலைகடலும் படைத்தழிக்குங் காரணனே. ௨

காரணனே யாரணனே கருத்தறியுங் கோமானே
பூரணனே நீரலைசூழ் பூலோக முடையவனே. ௩

பூவுலகம் வானுலகம் போற்றிசெய்யும் புண்ணியனே
மூவுலகங் கொண்டாடு முக்கியனே பாடுகிறேன். ௪

தோழிப்பெண் பாட்டுப்பாடச் சோதியுள்ள மன்னவனே
வாழியருள் தந்துநிதம் வண்மையொடு காத்தருள்வாய். ௫

காத்தருள்வாய் காத்தருள்வாய் கத்தாவே காத்தருள்வாய்
பார்த்தருள்வாய் கிருபையினாற் படைத்தவனே மதிப்புடனே-௬

மதித்தபுது மையைக்கேளீர் மக்கமெனு மோர்பதியாம்
கதித்தபுக ழவ்வூரில் கருபத்துல்லா பள்ளிபெண்ணே. ௭

கருபத்துல்லா பள்ளியதின் காரணங்க ளோபெரிது
மிகுத்திடும் பலாய்களெல்லாம் வெளிவாங்கி யோடும்பெண்ணே

நன்னிலமா மங்கிலத்தில் நபிவாழு நற்றலமாம்
பொன்னிலமு மொவ்வாதிப் பூமிக்கெல்லாம் பொதுத்தலமாம் (

பூமிக்கெல்லாம் பொதுத்தலமாம் போதுநிலா விலகிடுமே
க்ஷேமமுள்ள வரிசையெல்லாஞ் சேர்ந்ததலந் தோழிப்பெண்ணே.

பதியடுக்க நாடுமெவர் பாவமெல்லாந் தீர்ந்திடுமே
நதியழைத்த நபியிறசூல் நாடுந்தலந் தோழிப்பெண்ணே. ௰௧

நன்மதிசேர் மக்கநகர் நபியிறசூல் பிறந்ததலம்
பொன்மதில்சூழ் கோட்டையொடு பூங்கமுகுச்சோலைகளும். ௰௨

பூங்காவனங்களினுட் பூமணங்கள் வீசிடுமே
ஆங்கான அறபாமலை யதுபெரிதே தோழிப்பெண்ணே. ௰௩

அறபாத்து மலையிடத்தில் ஹஜ்ஜுசெய்யில் நன்மையுண்டாம்
நிறைவேற வேண்டியவை நேராகுந் தோழிப்பெண்ணே. ௰௪

நேராகவானோர்கள் நிதநிதம்வந் திறங்குந்தலம்
பாரோர்கள் புகழுகின்ற பள்ளியுண்டுந் தோழிப்பெண்ணே. ()

பள்ளிக்கெதி ராகப்பத்துப் பசுங்கொடியும் பறக்குதெடி
வெள்ளியைப்போ லேமனூரு விளங்கிடுமே தோழிப்பெண்ணே

மெத்தமெத்தப் பயத்துடனே மேலோனின் வணக்கஞ்செய்வார்
குத்துபா அன்றுதினங் குருன்முழங்குந் தோழிப்பெண்ணே. ()

அந்தமுள்ள நிலுறுநபி யழகாக வந்தப்பனே
புத்தியுறப் பெரியோனைப் புகழ்ந்திடுவார் தோழிப்பெண்ணே ()

அவரவர்கள் வந்தவணி லலங்கார மாயிருந்தே
திகழுகின்ற பள்ளியினுள் தீன்கலிமா முழக்கிடுவார். ௰௯

தீனிறசூல் தாமிருந்த திருமனையு மவ்விடமே
வானொளியு மவரொளியில் மறைந்துவெளி தோன்றிடுமே. ௨௰

தோன்றுநபி நாயகத்தைச் சூழ்ந்திருப்பார் வானவர்கள்
என்றுசொலும் பெருமையஃ தெண்ணவுந்தான் றொலையாதே.

எண்ணவுந்தான் தொலையாதே யிறசூல்தம் மெய்யொளிவு
கண்களினி லடங்காதே கல்பஃது குளிர்ந்திடுமே. ௨௨

கல்புகுளிர்ந் தேநிதமுங் கருமமெல்லாந் தீர்ந்திடுமே
செல்வமது பெருகிடுமே ஜென்னத்தது முண்டாமே. ௨௩

பண்ணமைந்த அருள்பீவி பாத்திமா நாயகியின்
தண்ணமைந்த பாவாவின் ஷபா அத்தது முண்டாமே. உச

சீராரு மசனுசைனுந் திருச்செல்வ ரிருவருந்தான்
வீறுரு முடிதரித்த வெற்றியுள்ளோர் தோழியரே. உரு

ஓரடுக்காய்த் தோழிப்பெண்ணே யுவப்பாகக் கலிமாவை
ஈரடுக்காய் நின்றோதி யெழிலாகத் தொழுதிடுங்காள். உசு

மூவடுக்காம் ஸக்காத்தீன்கள் முத்தான கையதினால்
நாவடுக்காந் தீனரகம் நம்மளவில் நாடாதே. உஎ

நாலடுக்காந் தோழிப்பெண்காள் நன்றிதரும் நோன்புதனை
மாலடுக்க வேபிடிப்பீர் வாழ்வுவருந் தோழிப்பெண்காள். உஅ

அஞ்சடுக்காந் தோழிப்பெண்காள் ஹச்சுதனைச் செய்திடுவீர்
நஞ்சடையுந் தீனரகம் நம்மளவில் நாடாதே. உசு

ஆறடுக்காந் தோழிப்பெண்காள் அல்லா வொருவ னென்றும்
மாறடுக்கா தேபுகழ வாழ்வதுறுந் தோழிப்பெண்காள். ௩0

ஏழடுக்காந் தோழிப்பெண்காள் ஏகன் மலக்குகளாம்
தாழடுக்கா தார்களென்று தானறிவீர் தோழிப்பெண்காள். ௩க

எட்டடுக்காந் தோழிப்பெண்கா ளிறங்கியநால் வேதமொடு
மட்டுமொழி யாம்சுகுபும் வல்லோன்மொழி தோழிப்பெண்காள்

ஒன்பதுவாம் நம்பிறசூலுள்ளநபி மார்களெல்லாம்
அன்பொடிறை தூதரென்றேயறிந்திடுவீர் தோழிப்பெண்காள்

பத்தடுக்கா இன்றதுதான் பலவுயிரெல் லாமெழுப்பிக்
கத்தனன்மை தீமைகளைக் கேட்கிறதாந் தோழிப்பெண்காள். ()

ஆய்பதினோர் காரியமும் ஆகுமல்லா தன்னிடத்தில்
நாயனொரு வன்றானு நன்மைகட் குகயமல்லால். ௩ரு

ஓதரிய தீமைதனக் குகயுமில்லை தோழிப்பெண்காள்
நீதியுட னிந்தப்படி நீவீ ரறிந்துகொள்வீர். ௩சு

உண்மையுள ஆதநபி யுவந்தபஜி றுத்தொழுகை
வண்மையுட னேதொழுக வருவீர்காள் தோழிப்பெண்காள். ()

வேதஇபு றாகீம்நபி வேண்டும்லுக றாத்தொழுகை
மாதர்களே நின்றுதொழ வாருங்காள் தோழிப்பெண்காள். ௩௮

ெ ஃறயூ னூசுநபி விளங்கும்அச றாத்தொழுகை
பற்றியதை யேதொழுகப் பாருங்காள் தோழிப்பெண்காள். ௩௯

தானவரா மூசாநபி தம்மகரி புத்தொழுகை
மானமுட னேதொழுக வாருங்காள் தோழிப்பெண்காள். ௪௰

ஈசா நபிதொழுதா ரினிதா ரிஷாத்தொழுகை
கூசாம லேதொழுகக் கூடிடுங்காள் தோழிப்பெண்காள். ௪௧

இஷாவதனில் நம்மிறசூல் இறைஞ்சும்வித்து றாத்தொழுகை
ஆசார மாய்த்தொழுக அணுகுங்காள் தோழிப்பெண்காள். ௪௨

அன்னமே தோகையரோ அழகாரும் பெண்குயிலே
சொன்னமே பைங்கிளியே தொழுதிடுவோம் நன்றாக. ௪௩

அல்லாவின் தூதுவனை ஆலநபி யானவனை
வல்லாண்மை கொண்ட முகம்மதுற்ற சூல்நபியை. ௪௪

கிட்டாத நன்னபியைக் கீர்த்தி பெறுங்கடலைக்
கட்டாணி முத்தொளியை ஹபீபிறசூ லானவனை ௪௫

சிந்தா மணியானைத் தீன்விளக்க வந்தவனைக்
கொந்தால மானவனைக் கோஜால மானவனை. ௪௬

சந்தாப மில்லாத சாதிகுல நாயகத்தை
முந்த வுதித்தவனை மூமின்கள் கைப்பொருளை, ௪௭

ஆதியருள் பெற்றோனை யாசார நீதியனைப்
பாதியாய் நிலவதனைப் பகிர்ந்த முகம்மதனை. ௪௮

முத்தா யுதித்திருந்த முகம்மதுற்ற சூல்நபியை
நித்தம் புகழ்ந்திடுவீர் நேசமுள்ள தோழிப்பெண்காள். ௪௯

சுத்தமுள்ள விறசூல் சுந்தரமாய்ப் பெற்றெடுத்த
பத்தினியாம் பாத்திமத்தின் பண்ஷபாஅத் தும்பெறுவீர். ௫௰

தோழிப்பெண்பாட்டு.

முற்றிற்று.

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY SOCIETY,
THANJAVUR.